மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 359, திரு. எம். ஆண்டி அம்பலம். இருக்கையில் இல்லை. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் கேட்கிறார் மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

359—

மிகவும் பிற்பட்ட சீர்மரபினருக்கு வீட்டுவசதி, குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் ஒதுக்கீடு.

* 10843—திரு. எம். ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனத்தவருக்கு வீட்டுவசதி வாரியம், குடிசைப்பகுதி வாரியம் ஆகிய குடியிருப்புகளில் 20 சதவிகிதம் ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோரிக்கை ஏற்புடையதாக இல்லை.

முற்பகல் 11-05

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் மற்றும் சீர்மரபினர் ஆகியோர்களுக்கு அதுவும் சீர்மரபினர்களுக்கு எல்லாம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இனாமாக அரிசனங்களுக்குக் கட்டிக் கொடுத்ததைப் போல வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் உழவு மாடுகள் இனாமாக வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிணறுகள் கூட இனாமாக வெட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்றையதினம் அந்த மாதிரி திட்டங்களை மீண்டும் பரிசீலனைக்கு எடுக்கிறோம் என்று கூட சொல்லவில்லை. நாம் கட்டிக் கொடுக்கின்ற வீடுகளிலாவது 20 சதவீதம் கொடுக்கப்படுமா என்று தான் கேள்வியே கேட்டு இருக்கிறார்கள். ஆகவே, இது மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 15]

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்கப்பட்டிருப்பது சீர் மரபினருக்கு மட்டுமல்ல, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இனத்தவர்களுக்கு, அத்தனை பேருக்கும் கேட்கப்பட்டிருக்கிறது. 107 சமுதாய இன மக்கள் இதில் அடங்கியிருக்கிறார்கள்.

மேலும் வீட்டுவசதித் துறையைப் பொறுத்தமட்டில் இந்த வீடுகள் ஒதுக்கப்படுகின்ற முறை என்பது மக்களின் வருமான வரம்பின்படிதான் வகுக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப் படையில் தான் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் மற்றும் குறைந்த வருமானப் பிரிவினர், மத்திய வருமானப் பிரிவினர், உயர்ந்த வருமானப் பிரிவினர் என்று 4 வகை களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். அந்த வருமான விகித அடிப்படையில் தான் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பினருக்கு 18 சதவீதமும், மாநில அரசு ஊழியர் களுக்கு 18⅓ சதவீதமும், மத்திய அரசு ஊழியர்களுக்கு 11 சதவீதமும், பாதுகாப்புப் படையில் பணியாற்றுகின்ற முன்னாள் பாதுகாப்புப் படையினர் ஆகியோருக்கு 7.5 சதவீதமும், சலவையாளர் மற்றும் முடிதிருத்துவோர் ஆகியோருக்கு 5 சதவீதமும், பத்திரிகையாளர் பிரிவினருக்கு 3 சதவீதமும், பொதுமக்கள் பிரிவினருக்கு 37 சதவீதமும், ஆக மொத்தமாக ஒதுக்கப்படுகிறது. அந்த அடிப்படையிலே இந்த 20 சதவீதம் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு மட்டும் ஒதுக்கவேண்டுமென்று சொன்னால் அது இயலாத காரியமாக இருக்கிறது. இப்போது இந்தக் கோரிக்கையை ஏற்போம் என்று சொன்னால் மற்ற இனங் களிலிருந்து இதே மாதிரி கோரிக்கைகள் எழும் என்ற காரணத்தால் தற்போது இதைப் பரிசீலிக்க முடியாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 360. திரு. சி. சுவாமிநாதன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

360—

கணபதிபுரம் ஊராட்சி ஆதிதிராவிடர் குடியிருப்பில் திருமண மண்டபம் கட்டும் திட்டம்

*16737—திரு. சி. சுவாமிநாதன்:

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை ஒன்றியம், கணபதிபுரம் ஊராட்சி ஆதி திராவிடர் குடியிருப்பில் திருமண மண்டபம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?